

FREE EDITION

May - 2017

# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 03 - 123

ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**அந்தக்காலம்:**
**இந்தக்காலம்:**

"ஆதிகாலத்தில் கோட்டை கட்டி நாடாண்ட மன்னர்கள், போர் என்று வந்துவிட்டால் பொதுமக்களுக்குச் சேதாரம் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள்.

கோட்டையைப் பிடித்து விட்டால், நாட்டையே பிடித்துவிட்டதாக ஒப்புக் கொண்டார்கள்.

இன்றைக்கு விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் மூலம் நாட்டிற்கும், மக்களுக்கும், உற்பத்திப் பொருள்களுக்கும் சேதாரம் விளைவிக்கப்படுகிறது.

அன்றிருந்த பொதுநல உணர்வு இன்றில்லை. இன்றுள்ள அழிவுப் போக்குகளை ஆன்மிகத்தால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும்."

-அன்னையின் அருள்வாக்கு

## "ஒரு தொண்டனுக்காக அன்னை புரிந்த அற்புதம்"

ஒரு சித்திரைப் பௌர்ணமி விழா! அன்னையின் சித்தர் பீடத்தில் அன்னதானப் பணியினைச் செய்வதற்குத் தஞ்சை மாவட்டத்தின் சார்பாக நானும் என் நண்பர் சக்தி மோகன் அவர்களும் பத்து நாட்களாக ஆலயத்தில் தங்கி தொண்டு செய்தோம். விழா முடியும் வரை தொடர்ந்து செய்து வந்தோம். அன்று எங்கள் பணியெல்லாம் முடிந்தது. ஆன்மிககுரு அருள்திரு அடிகளார் அவர்களிடம் ஆசி பெற்றுத் திரும்பினேன். அன்றே நான் சென்னைக்குச் சென்று அப்படியே பூனாவிற்குச் செல்வதாகத் திட்டம். அடுத்தநாள் சென்னையில் ஓய்வு எடுத்துக்கொண்டு மறுநாள் சென்ட்ரல் இரயில் நிலையத்தை அடைந்தேன்.

**சக்தி. கே. சந்திரசேகரன்**
கோவை

எக்ஸ்பிரஸ் வண்டிக்கு முன்பதிவு கிடைக்கவில்லை. முன்பதிவு இல்லாமல் டிக்கெட் காலை 8.50 மணிக்குத்தான் எடுக்க முடிந்தது. காலை 9.30 மணி இரயில் கிளம்பும் நேரம்! முன்பதிவு செய்யாதபெட்டி போட்டர்கள் மூலம் முயற்சி செய்தும் இடம் கிடைக்கவில்லை. எனக்குப் பெரிய கவலையாகப் போய்விட்டது. நின்றபடிக் கூடப் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு அன்று மிகப்பெரிய நெரிசல்! அதிகமான பயணிகள் கூட்டம்! அவசர அவசரமாக ஒரு பெட்டியில் முண்டியடித்துக்கொண்டு ஏறினேன். என் சூட்கேசை வைப்பதற்குக்கூட இடம் கிடைக்கவில்லை.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)




அன்னையின் அருள்வாக்கு:

**"இயற்கையினால் வளர்ச்சியுண்டு. விஞ்ஞானத்தினால் அழிவு உண்டு. தன் கையே தன்னைக் குத்திக்கொள்ளும்."**

# "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**


## செய்திச்சுடரில்...


**ஒரு தொண்டனுக்காக அன்னை புரிந்த அற்புதம்**
Page: 1 – 2

**மருவத்தூரில் அம்மாவின் அவதார நோக்கம்**
Page: 13 - 14

**UPCOMING EVENTS**
Melbourne: 3, 8, 11
Sydney: 5, 9

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 8

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 7

**Divine Miracles**
Page: 10

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 15

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


## "ஒரு தொண்டனுக்காக

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பூனா வரைக்கும் இப்படியே நின்றபடிப் பயணம் செய்ய வேண்டியதுதானா? நினைக்க நினைக்க அதிக வேதனையாக இருந்தது. அன்னையை நினைத்துக்கொண்டு மூல மந்திரத்தை மனத்தில் சொல்லிக்கொண்டு, "தாயே! என் மனத்தாலும், உடலாலும் உனக்குத் திருப்தியான பணியைச் செய்த எனக்குச் சுமார் 22 மணி நேரம் நின்று கொண்டே பயணம் செய்துதான் போக வேண்டும் என்பது உன் தண்டனையா? உண்மையாகவே நான் நல்லபடியாகத் தொண்டு செய்ததாகக் கருதுவாயேயானால் என் பிரயாணம் சுகமாக அமையும்படி உதவி செய் தாயே!"என்று வேண்டினேன்.

நான் நின்றிருந்த இடத்திற்கு மேலே லக்கேஜ் பர்த்தில் (Luggage Berth) இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் இராணுவ சீருடையில் காலை நீட்டி அமர்ந்திருந்தார். சுமார் 25 வயது இருக்கும். களையான முகம்! ஏனோ அவர் என்னையே பார்த்தபடி அமர்ந்திருந்தார். நான் அவரிடம் என் கையிலிருந்த சூட்கேஸைக் காட்டி "இதை மட்டில் மேலே வைத்துக்கொள்ளலாமா?"என்று கேட்டேன். "சரி வைத்துக்கொள்!"என்று சொல்லி, என் நண்பனுக்காக இடம் பிடித்து வைத்திருக்கிறேன்! என்று சொல்லியபடி உட்கார்ந்திருந்தார் அவர்.

இரயில் கிளம்ப இன்னும் இரண்டே நிமிடங்கள்! அவர் உடனே கீழே இறங்கி, "நீங்கள் ஏறிப்படுத்துக்கொள்ளுங்கள்!"என்று சொல்லிக் கம்பார்ட்மெண்ட் வாசலிலேயே நின்றிருந்தார். வண்டி கிளம்ப ஆரம்பித்தது! அவர் என்னைப் பார்த்துச் சிரித்தபடியே, "நீ சுகமாகப் பிரயாணம் செய்! என் நண்பன் நீதான்! உனக்காகத்தான் இடம் பிடித்திருந்தேன்"என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு இறங்கிச் சென்றுவிட்டார். இடம் கிடைத்த மகிழ்ச்சியில் அவர்க்கு நன்றி கூறக்கூட முடியவில்லை. அதற்குள் அவர் இறங்கிப் போய்விட்டார். முன்பின் தெரியாத அவர் மேற்கண்டவாறு கூறிய வார்த்தைகளை எண்ணி என் மனம் அசை போட்டது.

அம்மாதான் இந்தச் சிப்பாய் உருவத்தில் வந்து உதவி செய்திருக்க வேண்டும் என்பது என் உறுதியான எண்ணம்! அன்னையின் கருணையை எண்ணி என் உடல் சிலிர்த்தது! அந்தப் பெட்டியில் நின்றிருந்த மற்றவர்கள் என்னை அதிசயமாகப் பார்த்தனர். நம் பெட்டியை வைப்பதற்கு இடம்தர மறுத்துவிட்ட அந்த மிலிட்டரிக்காரன் இந்த ஆளுக்கு இடத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டானே!" என்று பேசிக்கொண்டார்கள். அன்னையை மனதார நினைத்து வேண்டிக்கொண்டால் நேரடியாக வந்தும் உதவி செய்வாள் என்பதற்கு இந்த அற்புதமே ஒரு சான்றாகும். "வேண்டும் பொருளைத் தருவாய் போற்றி ஓம்!"என்ற மந்திரம் உண்மையாயிற்று..

### பக்தியின் அருமை

"எங்கும் தேடி அலையாமல் இருந்த இடத்திலிருந்தே சம்பாதிப்பது, விலை கொடுத்து வாங்க முடியாதது, விற்கவும் முடியாதது,
இந்த உலகத்தில் பக்தி ஒன்றுதான் மகனே!"

**அன்னையின் அருள்வாக்கு**

# Melbourne - Mandrams – Upcoming Events – May 2017

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 05.05.2017 | Friday | சித்திரை | 22 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 07.05.2017 | Sunday | சித்திரை | 24 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 12.05.2017 | Friday | சித்திரை | 29 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 14.05.2017 | Sunday | சித்திரை | 31 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 19.05.2017 | Friday | வைகாசி | 05 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 21.05.2017 | Sunday | வைகாசி | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 26.05.2017 | Friday | வைகாசி | 12 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 28.05.2017 | Sunday | வைகாசி | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**10.05.2017 – புதன் - பௌர்ணமி, 25.05.2017 – வியாழன் - அமாவாசை**

## ஆன்மிககுரு
## அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



**ஏன் உடனே தண்டிக்கக் கூடாது?**

“தவறு செய்பவனையும், அக்கிரமம் செய்பவனையும் அம்மா உடனுக்குடனே தண்டிக்கக் கூடாதா! என்று கேட்கிறார்கள். அம்மா அப்படி தண்டிக்க ஆரம்பித்தால் ஒரு புல் பூண்டு கூட மிஞ்சாது.”

**பக்தன் எப்படி இருக்க வேண்டும்**

“எனக்குக் கட்சி வேண்டாம்! சாதி வேண்டாம் அம்மா! உன் அருள்தான் வேண்டும் என்று இரு!”

**ஏமாந்து விடாதே!**

“அம்மா அருள் கொடுக்கிற நேரத்தில் தான் ஒருவனுக்குச் சிரமத்தைக் கொடுக்கும். புத்தியை மாற்றும். அப்படிப்பட்ட நேரத்தில் ஏமாந்து விடாதே!.”

**காசு கொடுத்து வாங்க முடியாது!**

“எதையும் காசு கொடுத்து வாங்கிவிடலாம் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆன்மிகத்தைக் காசு கொடுத்து வாங்க முடியாது.”

# யாக சாலையில் பெற்ற தியானக் காட்சி

கோவை நகரத்தில் ஹட்கோ காலனியில் ஒரு சக்திபீடம் அமைக்கும்படி அன்னை ஆணையிட்டிருந்தாள். அந்தச் சக்தி பீடத்தில் நிறுவப்பட வேண்டிய அன்னையின் விக்கிரகம் திருமுருகன் பூண்டி சிற்பச்சாலையில் வடிக்கப்பட்டது. விக்கிரகம் முழுமையடைந்ததும் 7.4.1989 அன்று ஹட்கோ (Hudco) காலனி வார வழிபாட்டு மன்றத்திற்குக்கொண்டு வரப்பட்டது. 10.04.1989 அன்று கரிக்கோலம் புறப்பட்டது. அதற்கு முதல் நாள் காலை 9.00 மணியளவில் மன்றத்தில் 11 கலசங்கள் வைத்து அன்னையை வேண்டி வேள்விப்பூசை நடத்தப்பட்டது.

அந்த வேள்வியின்போது மன்றத் தொண்டர் ஒருவர் தனி இடம் தேடித் தியானத்தில் அமர்ந்தார். தியானம் கை கூடிய நிலையில் அந்தத் தொண்டர்க்கு ஓர் அற்புதக் காட்சி கிடைத்தது.

கரிக்கோலத்திற்காகத் திருவுலா செல்லுவதற்காக மன்றத்தில் கொண்டு வந்து வேள்விச் சாலையின் அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னையின் திருவுருவச் சிலையின் முகமும், பெண்ணின் உடலும் கொண்டு சிவப்புச் சேலையணிந்த திருக்கோலத்துடன் விக்கிரகத்திலிருந்து வெளிப்பட்டாள். தன் சடைமுடியினை ஒரு கையில் ஏந்தியவாறு, வேள்விக் களத்தைச் சுற்றியிருந்த மகளிரை விலக்கிக்கொண்டு வேள்விச் சக்கரத்திற்கு நடுவில் வந்தாள். நடந்து வந்து யாக குண்டத்தின் நடுவிலே நின்றாள்.

யாக குண்டத்தின் நடுவிலே நின்ற அந்தக் கோலம் பற்றி அந்தத் தொண்டர் கூறினார்.

“வேள்வித் தீயின் நடுவில் நின்ற அன்னை, பதினாறு கரங்களோடு காட்சி அளித்தாள். தன் ஒரு கரத்தில் உள்ள மூன்று விரல்களை நீட்டிக் காட்டினாள். அடுத்த கணம் அன்னையின் அந்தத் திருமேனி திருமாலின் உருவமாக மாறிற்று. சங்கு சக்கரம் ஏந்திய அந்தத் திருமாலின் உருவம் பின்னர் அப்படியே வேள்வித் தீயில் ஐக்கியமாகிவிட்டது”என்றார் அந்தத் தொண்டர்.

**டாக்டர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்,** M.A., B.O.L., Ph.D.
கோவை

திருமால் அல்லது மகா விஷ்ணுவைப் புராணகாலச் சமயம் காத்தல் கடவுளாகவும், மும்மூர்த்திகளில் ஒருவனாகவும் குறிப்பிடும். வேத காலத்தில் சூரியனாகவும், மூவுலகை ஈரடியால் அளந்தவன் என்றும் மகாவிஷ்ணு போற்றப்பட்டார்.

சதபத பிராமணம் பன்னிரண்டு ஆதித்தர்களில் ஒருவனாக விஷ்ணுவைக் குறிப்பிடுகிறது. மகாபாரதம் ஆதித்தர்களில் 12ஆவது ஆதித்தனாக மகாவிஷ்ணுவைக் குறிக்கின்றது. விஷ்ணுவை ‘யக்ஞ சொருபம்’என்று வேதங்கள் புகழும். அந்த மகாவிஷ்ணுவாகவும் இருப்பவள் நானே என்பதை அன்னை அந்த வேள்விச்சாலையில் அன்பர் ஒருவர்க்கு உணர்த்தினாள்.

“தன் இருகை விரல் நகங்களிலிருந்தும் தோன்றிய நாராயணனின் பத்து உருவங்களோடு கூடியவள்”என்று லலிதா சகஸரநாமம் அன்னையைப் போற்றிக் கூறும் (லலிதா-32)

‘யக்ஞப் பிரியா’(164) – என்று லலிதா சகஸரநாமம் அன்னையைப் போற்றிப் புகழ்கிறது. வேள்விகளில் விருப்பம் உள்ளவள் என்று அதற்குப் பொருள். வேள்வியின் வழிபட உரியாய் போற்றி ஓம் என்று 1008 போற்றி மலர்கள்(135) மந்திரம் கூறும். ‘மகா யாகக் கிரம ஆராதத்யா’என்றும் லலிதா சகஸ்ரநாமம் போற்றிப் புகழும். மகாயாக முறையில் ஆராதிக்கத் தக்கவள் என்பது அதன் பொருள்.

மனத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் அமைகிற வழிபாடே ஆராதனம் எனப்படும். அந்த வழிபாடுகளில் சிறப்பான வழிபாட்டு முறை மகாயாகம். அன்னைக்குப் பரிவார தேவதைகள் என 64 யோகினி கணங்கள் உண்டு. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெளிமுகமாக நடத்தும் புறவழிபாடே மகாயாகம் எனப்படும்.

‘நான் என்ற அகப்பற்றையும் எனது என்ற புறப்பற்றையும் அக்கினியால் சுட்டெரித்துவிட்டு உன்னை வழிபடுகிறேன்’ என்பதுதான் வேள்வியின் நோக்கம். அவ்வாறு உண்மை உணர்வுடன் வேள்விப்பூசை செய்கிறபோது மனத்தில் உள்ள விகாரங்களும் அழுக்குகளும் எரிந்து சித்தம் தூய்மை ஆவதற்கு வழியேற்படும். சித்தம் தூய்மையானால் அன்னையை அடைவதற்கான வழி எளிதாகிறது. எதுவும் எனது அல்ல என்று கூறி ஆவுதியை அர்ப்பணிப்பதுதான் வேள்வியின் நோக்கம். அவ்வாறு செய்யப்படும் இடங்களில் அன்னை அவற்றை ஏற்றுக்கொள்வதை உணர்த்த வேண்டி யாரோ ஒருவர்க்குக் காட்சி கொடுக்கிறாள்.


ஓம் சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – May 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**
Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



| | | | |
|---|---|---|---|
| 05.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.05.2017 | WEDNESDAY– புதன் | 7.30p.m. – 9.30p.m. | Chithirai Pournami Vilakku Pooja "சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 12.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## கண்டதும் கேட்டதும்

### (தென்னாபிரிக்க பெண்மணியின் அனுபவம்)

"புலவர்! இங்கே வாங்களேன்! தென்னாபிரிக்காவிலிருந்து ஓர் அம்மா வந்திருக்கு! அந்த அம்மா வீட்டிற்கு நம் அம்மா சென்று காட்சி கொடுத்துச்சாம்! நீங்களும் வந்து கேளுங்க! சக்தி ஒளியில் எழுதுங்க!" என்று மலேசிய டாக்டர் திருமதி கந்தையா அவர்கள் நம்மை அழைத்தார்.

தைப்பூச விழா முதல் நாள் அம்மாவின் வருகைக்காகவும், பாதபூஜை தரிசனத்துக்காகவும் எல்லோரும் கருவறை முன் மண்டபத்தே பரபரப்பாக இருந்த நேரம் அது!

தென்னாபிரிக்காவிலிருந்து வந்த மூன்று பெண்மணிகளில் ஒருவரைக் காட்டி "இவர்தான்! இவர் அனுபவத்தைக் கேளுங்களேன்!" என்றார் திருமதி சரோஜினி கந்தையா.

அந்தப் பெண்மணிக்குச் சுமார் 35 வயதிருக்கும். மிக மெலிந்த தோற்றம். ஏதோ நோய்வாய்ப்பட்ட பெண்மணி அவர். இளவயது முதற்கொண்டே சக்தி வழிபாடு செய்து வருகிறவர் அவர்.

### வேம்பு

ஒருமுறை தட்டம்மையால் பாதிக்கப்பட்டுத் துன்புற்றுக் கொண்டிருந்த நேரம் அது. 4.1.95 புதன்கிழமை நீராடிவிட்டு பூஜைகளை முடித்துக் கொண்டு காலை 11.00 மணியளவில் வீட்டின் ஹாலில் அமர்ந்தபடி இருந்திருக்கிறார். அப்போது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்கவே எழுந்து சென்று கதவைத் திறந்திருக்கிறார்.

மஞ்சள் புடவையில் நெற்றியில் குங்குமத்துடன் ஒரு நடுத்தர வயது பெண்மணி. நீராடி முடித்து, கூந்தலை ஒரு சேரப் பின்புறம் உலர்த்துகிற நிலையில் தொங்கவிட்டு தெய்வீகக் களை பொதிந்த அழகான முகம்.

"நான் ஓம் சக்தி கோயிலிலிருந்து வருகிறேன்.. உனக்காகத்தான் வந்திருக்கிறேன்! எனக்குப் பசிக்கிறது.. கொஞ்சம் அரிசி கொண்டு வந்து போடு!" என்று கேட்டார்.

பசிக்குச் சோறு போடு என்றுதானே கேட்பார்கள்? இந்த அம்மா அரிசி கொடு என்று கேட்கிறதே என்றெல்லாம் அப்போது ஆராய்ச்சி பண்ணத் தெரியவில்லை.

உள்ளே சென்று அரிசி எடுத்து வந்து கொடுக்க, முந்தானையை நீட்டி வாங்கிக்கொண்டார் அந்தப் பெண்மணி.

"இன்னும் நான் ஏழு வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. நீ தினமும் மஞ்சளும், வேப்பிலையும் அறைத்துக் கன்னத்தில் தடவிக் கொண்டு வா! என்ன?" என்று கூறியபடி அங்கிருந்த செம்பில் இருந்த தண்ணீரை இவர்மேல் தெளித்துவிட்டு நெற்றியில் குங்குமமும் இட்டு "ஏழாவது நாள் வருகிறேன். வரட்டுமா…நீ ஓம் சக்தி கோயிலுக் வா!" என்று கூறிவிட்டு விடுவிடுவென வெளியேறிவிட்டார். அந்தப் பெண்மணி!

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

யார் இந்தப் பெண்மணி? நமக்கு முன்பின் அறிமுகம் இல்லையே... பசிக்கிறது... அரிசி போடு என்றார்களே.. சோறு போடு என்று கேட்காமல் அரிசி போடு என்றாளே...

ஓம் சக்தி கோவிலிலிருந்து வருகிறேன் உனக்காகவே வந்தேன் என்றாளே..! இன்னும் ஏழு வீட்டுக்குப் போக வேண்டும் என்று வேறு கூறினாளே.. ஏழு வீடு என்று எதைக் குறிப்பிட்டாள்?

ஒருவேளை அம்மாவாக இருக்குமோ.. இத்தனை வருடமாக மேற்கொண்ட சக்தி உபாசனைக்கு இரங்கி நம்மைத் தேடி வந்தாளோ.. நம்மைத் தேடி வரும் அளவு அப்படி என்ன புண்ணியம் செய்து விட்டோம்? என்றெல்லாம் எண்ணியபடித் தவிப்பும் பரவசமும் கொண்டார் அந்தப் பெண்மணி!

“மேடம்! எங்கள் வீட்டிற்குப் புதியதாக யார் வந்தாலும் எங்கள் வீட்டு நாய் குரைத்து வம்பு பண்ண ஆரம்பித்துவிடும். அன்றைக்குப் பாருங்கள் அந்த நாய் பெட்டிப் பாம்புபோல் அடங்கிச் சுருண்டபடியே கிடந்தது. எல்லாமே அம்மாவின் கருணைதானே” என்று சரோஜினி கந்தையாவிடம் சொல்லிப் பூரிப்படைந்தார். அந்தத் தென்னாபிரிக்கப் பெண்மணி.

சரி! உங்கள் அனுபவத்தையெல்லாம் எழுதி சக்தி ஒளிக்குக் கொடுக்கலாமே என்று கேட்டோம்.

“இப்போதுதான் அங்கப்பிரதட்சணம் வந்தேன். களைப்பாக இருக்கிறது. ஏ.வி.எம். ஸ்டுடியோவில் ஒரு பாட்டு ரிக்கார்டிங் இருக்கிறது. மதியத்துக்குள் நான் போயாக வேண்டும். ரிக்கார்டிங் நல்லபடியாக முடிய வேண்டும் என்று அம்மாவிடம் வேண்டிக்கொண்டு செல்கிறேன். அம்மாவின் தரிசனத்துக்காகவே காத்துக் கொண்டிருக்கிறேன். அம்மா வீட்டிலிருந்து வந்ததும் தரிசனம் முடித்துக்கொண்டு சென்னைக்குப் பறக்க வேண்டும்” என்றார்.

“அதுசரி! ஏழாம் நாள் வருகிறேன் என்று அம்மா சொல்லிவிட்டுப் போனாளே.. ஏழாம் நாள் வந்தாளா?” என்று கேட்டோம்.

“எதிர்பார்த்தபடிதான் இருந்தேன். கண்ணுக்குத் தெரியும்படியாக அம்மா வரவில்லை. சூட்சுமமாக வந்துபோயிருக்கிறாள் என்று மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. எப்படி தெரியுமா?

எங்கள் பூஜை அறையில் அம்மா படத்திற்கு முன்பாக நவதானியம் பரப்பி வைத்திருந்தேன். அதிலே மூன்று விரல்கள் பதிந்த அடையாளம் காணப்பட்டது. அதற்கு மேலே புத்தம் புது வேப்பிலை ஒன்றும் இருந்தது! – எனவே ஏழாம் நாள் அம்மா யார் கண்ணுக்கும் தெரியாது வந்து சென்று விட்டாள்” என்றார்.

எங்கெல்லாம் பக்தி மிகுந்த ஆன்மாக்கள் இருக்கின்றனவோ.. அவதார காலத்தில் பரம்பொருள் வருகிறபோது வலியச் சென்று அந்த ஆன்மாக்களை ஆட்கொள்ளுமாம். ஆந்த ஆன்மாக்கள் பக்தி வசப்பட்டுத் தொழுவது கண்டு பரம்பொருள் ஆனந்தப்படுமாம்.

அவதார காலத்தில் இப்படி எல்லாம் நடக்கும் என்கிறார்கள்.

அமெரிக்காவில் பென்சல்வேனியா என்ன..? தென் ஆபிரிக்கா என்ன..? பாரிஸ் என்ன..? - எங்கெல்லாம் ‘அம்மா!’ என்று பக்திப் பரவத்தோடு ஆன்மாக்கள் ஏங்கித் தவிக்கின்றனவோ அங்கெல்லாம் அம்மா ஏதோ ஒரு வகையில் தன் இருப்பைப் புலப்படுத்தித் தன் அவதாரத் தலமான மேல்மருவத்தூருக்கு ஈர்த்துக்கொள்கிறாள்.
தன் எல்லையில்லாக் கருணையில் நனைத்து அனுப்புகிறாள்.

தேசம் - காலம் - தூரம் என்பன எல்லாம் நமக்குத்தான்! எல்லாம் கடந்த அவளுக்கு வரையறைகள் ஏது!

ஓம் சக்தி!

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**சித்திரை – அமாவாசை–பௌர்ணமி :** தானியம் உண்டாகும்.
தானியங்கள் மிகுதியாக விளையும்..

**வைகாசி - அமாவாசை–பௌர்ணமி:** செல்வம் உண்டாகும்.
எல்லா வகைகளிலும் செல்வம் சேரும் நிலை உருவாகும்.

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நீரில் கரைத்து விடப்பட்ட சூனியம்

வந்தவாசி பகுதியைச் சேர்ந்த வாலிபன் ஒருவன். 19, 20 வயதிருக்கும். கட்டுடல் கொண்டவன். அவனுக்கு யாரோ சூனியம் வைத்துவிட்டார்கள். அதனால் மூளைக்கோளாறு ஏற்பட்டு அட்டகாசம் புரிய ஆரம்பித்தான். தாயாரை அடிப்பது, தகப்பனை அடிப்பது, அக்கம்பக்கத்தார்களை அடிப்பது என அட்டகாசம் தாங்க முடியாமல் அவனுக்குக் காலில் சங்கிலி போட்டுக்கட்டி வைத்து வைத்தியம் பார்த்தனர். எந்தப் பயனும் விளையவில்லை. இறுதியாகக் கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டுப் புறப்பட்டனர்.

வந்தவாசியிலிருந்து வந்த வண்டி சோத்துப்பக்கத்தில் நின்றது. அந்தப் பையனின் நிலையையும், பெற்றோரின் பரிதாப நிலையையும் பார்த்த சிலர், "பக்கத்தில் மேல்மருவத்தூர் அம்மன் கோயில் இருக்கிறதே.. அங்கே தீராத நோயெல்லாம் தீர்க்கிறதாமே.. இங்கே பக்கத்தில்தான் இருக்கிறது. அங்க சென்று கும்பிட்டுவிட்டு, அருள்வாக்கு கேட்டுவிட்டு, கீழ்ப்பாக்கம் வைத்தியசாலைக்கு அப்புறம் கொண்டு போங்கள்" என்று யோசனை சொன்னார்கள்.

அங்கும்தான் சென்று பார்க்கலாமே.. என்றெண்ணி அந்த வாலிபனை அழைத்து வந்தார்கள்.

"இத்தனை நாள் இந்த ஆலய எல்லையிலேயே இருக்க வேண்டும். ஆலய எல்லையைத் தாண்டக்கூடாது! சர்வ ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்வது உங்கள் பொறுப்பு"என்று அன்னை பெற்றோரைச் சற்றே கடுமையாக எச்சரிந்திருந்தாள்.

அவனை ஆலய எல்லை விட்டு அகலாமல் பார்த்துக்கொள்வதே பெற்றோர்களுக்குப் பெரும்பாடாக ஆயிற்று. அங்கும் இங்கும் ஓடுவான். ஆடுவான். சிலசமயம் விசாரிப்பவர்களை ஓங்கி அடித்துவிடுவான் இரும்புச் சங்கிலியால் இரவு நேரங்களில் பிணைத்து வைக்கவேண்டியதாயிற்று.

அம்மா, மந்திரிப்பு அளிக்கும் நாட்களில் அவனை இருவர் வலுவாகப் பிடித்துக்கொண்டு மந்திரிப்புக்காக அம்மா முன் நிறுத்துவார்கள். "நான் முருகன்! நீ பராசக்தி! நான் முருகன்! நீ பராசக்தி!"என்று உரத்த குரலில் முழங்குவான். பாவம் அவன் பெற்றோர்கள். அவனிடம் அடியும் உதையும் பட்டுக்கொண்டு அவனைப் பாதுகாக்க வேண்டியதாயிருந்தது.

ஒருநாள் அம்மா, கருவறையின் பின்புறம் அவனை இழுத்துச் சென்று, தன் ஒரு காலால் அவன் உடலை மிதித்துக் கொண்டு அவன் மார்பில் சூலத்தை வைத்து அழுத்தினாள். அருகிலிருந்து பார்த்தவர்கள் ஒன்றுமே புரியாமல் நின்றனர். அந்த நேரம் அம்மாவின் திருமுகம் உக்கிரமாக மாறிற்று. பையன் உரத்த குரலில் அலறினான். பின் மயக்கமடைந்தான். உடனே பக்கத்தில் உள்ளவர்கள் அழைத்து, அவன் மீது ஒன்பது குடம் தண்ணீர் ஊற்றும்படிக் கட்டளையிட்டாள். அதன்பிறகு அந்த வாலிபன் தெளிவடைந்தான்.

ஆறு மாதங்களாகச் சுய உணர்வே இல்லாமல் ஆர்ப்பாட்டமும், அட்டகாசமும் புரிந்த அவன் சுய உணர்வு வரப்பெற்றான். துந்தையைப் பார்த்து "அப்பா!"என்றான், தாயைப் பார்த்து "அம்மா!"என்று பாசத்தோடு அழைத்தான். அதன்பிறகே அந்த இளைஞன் குணமடைந்தான். பெற்றோர்கள் ஆனந்தக் கண்ணீர் மல்க அவனை அழைத்துச் சென்றனர்.

நீரில் கரைத்து வைக்கப்பட்ட சூனியத்தை அடிகளார் அகற்றிய இந்தச் செய்தி மந்திரவாதிகளிடையே பெரிய பரபரப்பை உண்டாக்கியது. அதன்பிறகு அவர்களது மறைமுகமான எதிர்ப்பு வேலைகள் தொடங்கின. ***


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

## Melbourne - Mandrams – Upcoming Events – May 2017



### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 05.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.05.2017 | WEDNESDAY– புதன் | 7.30p.m. – 9.30p.m. | Chithirai Pournami Vilakku Pooja "சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 12.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

### Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 14.05.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.05.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

அம்மா! "இல்லறத்தில் துறவு உண்டு. அத்தகைய பெண்கள் துறவியானால் அவர்களுக்கு மகாசக்தி உண்டு" எனும் அருள்வாக்கிற்குத் தயவு செய்து விளக்கம் தாருங்கள்?

"உலகத்தில் வாழ வேண்டும், உலகத்தோடு ஒட்டிக் கொள்ளக் கூடாது" என்று மகான்கள் கூறுவார்கள். இல்லறத்தில் துறவு என்பது திருமணம் செய்து கொண்டு துறவு மேற்கொள்வது என்று பொருள் அல்ல. இல்லறத்திலும் நல்லறத்தை மேற்கொள்ள வேண்டும். எதிலும் அதிகம் ஆசை வைக்கக் கூடாது. போதும் என்ற குணம் வேண்டும். பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும். முக்கியமாக இல்லறத்தில் இருக்கும் பெண்கள் துறவு மேற்கொள்வது என்பது பொருள் அல்ல. துறவு என்பது பொருள் ஆசையை துறத்தல் என்று எடுத்துக் கொள்ளலாம். சாதாரணமாகப் பெண்களுக்கு நகைகள், துணி மணிகள் என்று ஆசை உண்டு. எதிலும் அதிகப் பேராசைப்படாமல், இந்தக் கலியுகத்தின் தர்மத்தின்படி எதிலும் அதிகமான பற்று வைக்காமல், கற்பு நெறி தவறாமல், ஒழுக்கத்தோடு வாழ்ந்து, மற்றவர்களுக்கு உதவி செய்து, பெண்மைக்குரிய இலக்கணத்தோடு வாழ்வதே சிறந்த துறவு. தெய்வ நம்பிக்கையோடு, பற்றுதல் அதிகம் இல்லாமல் வாழும் பெண்களுக்கு மகாசக்தி உண்டு என்றுதான் அம்மா கூறி இருப்பார்கள். "இல்லறத்'தோடு ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும்" என்று கூறும் அம்மா துறவியாகுப்படிக் கூறி இருக்க மாட்டார்கள். துறவு என்பதற்கு துறத்தல் (விட்டுவிடுதல்) என்று பொருள்கொண்டோமானால் அவரவர்களுக்கு ஏற்ற பதில் கிடைக்கும்.

# Sydney - Mandrams - Upcoming Events – May 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**
Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 05.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.05.2017 | WEDNESDAY– புதன் | 7.30p.m. – 9.30p.m. | Chithirai Pournami Vilakku Pooja "சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 12.05.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.05.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## "என் தொண்டர்கள் ஆபத்தில் சிக்கிக் கொண்டார்கள்"

- வேம்பு -

சங்கரன் கோயில் பகுதியில் அயராது தொண்டு செய்யும் இளைஞர்கள் உண்டு. ஒரு சமயம் உழவாரப் பணி செய்வதற்காக ஒரு பாழடைந்த கோயிலுக்குச் சென்றனர். சித்தர் பீடத்தின் முறைப்படி திருஷ்டி சுற்றிவிட்டுத்தான் அந்தக்கோயிலைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு சித்தரின் சாபத்தினால் பாழடைந்த கோயிலாம் அது!

பல ஆண்டுகட்கு முன்பு ஒரு சித்தர் அந்தக் கோயிலுக்குப் பசியுடன் சென்றாராம். துறவிகட்கும், சாதுக்கட்கும் உணவளிக்கும் ஏற்பாடு அப்போது இருந்தது. பசியுடன் சென்று உணவு கேட்ட அந்த சித்தர்களின் பிச்சைக்கார கோலத்தைக் கண்ட அங்கிருந்த அர்ச்சகர்கள் உணவளிக்க மறுத்ததோடு அவமரியாதை செய்தார்களாம். அதனால் கோபம் கொண்ட சித்தர் சாபம் இட்டுவிட்டாராம். அதனால் படிப்படியாக அந்தக் கோயில் நலிவடைந்து போயிற்று.

அன்றாடம் விளக்கேற்றக்கூட ஆட்கள் இல்லை. பராமரிப்பு இல்லை. இப்படிப்பட்ட கோயில்களில் தீய சக்திகள் குடி கொள்ளும். அங்கே செல்பவர்கட்குத் துன்பம் கொடுக்கும். இதெல்லாம் தெரியாத நம் இளைஞர்கள் ஆர்வ மிகுதியால் உழவாரப் பணி செய்ய அந்தக் கோயிலுக்குள் புகுந்தனர். வழக்கப்படி திருஷ்டி கழித்தனர்.

அங்கிருந்த கல்லும், முள்ளும் அகற்றி, மூல மந்திரம் சொல்லி, குரு போற்றி மந்திரம் 108 சொல்லி, வழிபாட்டைத் தொடங்கினார்கள்.

இவர்கள் வழிபாடு செய்த அதே நேரத்தில், அருட்கூடத்தில் பக்தர்கள் சிலரோடு பேசிக் கொண்டிருந்த அடிகளார், பேச்சை நிறுத்திவிட்டு, "கொஞ்சம் இருங்கள் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தார்."கொஞ்ச நேரம் கழித்துவிட்டு அடிகளார் மீண்டும் வந்து அமர்ந்தபடி சொன்னார்.

"ஒண்ணுமில்லை.. நம் சங்கரன் கோயில் இளைஞர் அணியினர் பாழடைந்த கோயில் ஒன்றில் உழவாரப்பணி செய்யப் போயிருக்கிறார்கள். அங்கே வழக்கமாகச் செய்யும் திருஷ்டி மட்டும் போதாது, வேறு சில பரிகாரங்களைச் செய்து விட்டுப் போக வேண்டும். ஆலயத்தில் சிக்கிக் கொண்டார்கள். அதனால்தான் உள்ளே போய், தியானம் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியதாகிவிட்டது?" என்றார். அச்சமயம் சாந்தா என்ற பெண்மணியும் இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார். அந்த இளைஞர் அணித் தொண்டர்கள் அவருக்கும் பரிச்சயமானவர்கள்.

வேளியில் வந்ததும், உடனே தொலைபேசி மூலம், ஏம்பா.. நீங்களெல்லாம் உழவாரப் பணி செய்ய அந்தக் கோயிலுக்குப் போனீர்களா? என்று விசாரித்தார். ஆம்! என்று பதில் வந்தது.

அங்கே திருஷ்டி மட்டும் கழித்தில் போதாதாம். வேறு சில பரிகாரங்களும் செய்ய வேண்டுமாம். நீங்களெல்லாம் ஆலயத்தில் சிக்கிக்கொண்டதாகச் சொல்லி, அம்மா உங்களைக் காப்பாற்ற தியானம் இருந்ததுப்பா! இப்பத்தான் அம்மா இதையெல்லாம் சொல்லிச்சு! என்றார். எங்கோ ஒரு பாழடைந்த கோயிலில் சென்று உழவாரப் பணி புரிந்த தொண்டர்கட்கு வர இருந்த ஆபத்தை முன்கூட்டியே தெரிந்து அவர்களைக் காப்பாற்றினார் அடிகளார்.

ஃஃஃஃ

# Divine Miracles at Melmaruvathur

## Mother saved him when his ship was bombed:

Sri Vijayarangan, who was an officer on a ship, belonged to Royapurm in Chennai. He built a house obtaining a loan pledging jewellery. Unfortunately he lost his job. Many people whopromised to get him another job cheated him. Even when he got a job he was paid only part salary or none at all by his employer. He had difficulty repaying the loan and also interest. He faced poverty and suffering. He did not have the heart to sell the house. A friend of his suggested that he should once visit Maruvathur. He went for divine revelation, Mother recounted all his problems and asked him to take a Kalasha and a Vilakku and worship them at home. She told him that she would secure a change of place for him and see that he gets money. Even after he returned there were fresh problems. He had to get off a ship because its papers were not in order. He returned to Mother.

Mother said, "Son, your life is like a cloth fallen on thorns. It has to be extricated only bit by bit so that it does not tear. Observe silence on Amavasaya and Pournami days. On Tuesdays and Fridays chant the 108 and 1008 praises. I shall see that you are freed from your difficulties. "He went five times to Her and each time he received the same answer.

On September 15, 1987 he boarded a ship bound for Iran where a war was raging. His ship had to go to Pakistan from Bhakthar Abbas in Iran. Having faith in Mother he undertook the voyage without misgivings. On 27th September, the ship was moving fast on its journey. Vijayarangan recited the 108 praises and prayers before going on duty. He replaced the captain on the bridge.

It was 6 o'clock when there was a big explosion in the engine room. It had been hit by a bomb killing one sailor there. Rangan ran along the fourth tier shouting, "Mother! Mother!" When he reached the place where the lifeboats were, there were many already there. He somehow got into a boat and it started drifting in the sea. The people on the boat saw a fin and got frightened that they were among sharks. Luckily they returned out to be dolphins, which have been believed to guide people to safety. Wiithin four hours a ship called Salvage had found temand took them to Iran.

When the ship company informed the family about Rangan's reaching Iran his wife was worried because the Iran-Iraq War wassgoing on. The family sat in front of Mother's picture ad prayed every day. Then during Navarathri his wife went to Maruvathur and prayed thee reciting the mantras. On October 7, Rangan finally reached Bombay safely. The next Friday ha and his wife went Maruvathur and rolled down the corridor. Mother asked him to continue his meditation and also worship and ask Her if he needed any thing. She blessed him to be happy. Rangan's wife told Mother that Her husband had lost his certificates. Mother told her, "I have saved your husband's life. He medicated on me and I saved not only him but his companions also." When Rangan heared this he was amazed that Mother had been with him all along and known that he had called out to Her for help!

***

### ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# Melbourne - Mandrams – Upcoming Events – May 2017

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 14.05.2017 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>Chithirai Pournami Vilakku Pooja<br>"சித்திரைப் பௌர்ணமி திருவிளக்குப் பூஜை" |

## நாமக்கல் தொண்டர்

அடிகளாரும் நம்மைப் போல இல்லறத்தில் இருப்பவர்தானே..! நம்மைப் போன்ற மனிதர்தானே.. என்று இந்த அவதார மகிமையை உணராத செவ்வாடைத் தொண்டர்களும் உண்டு. இது பற்றி அன்னை அவ்வப்போது அருள்வாக்கில் மகிமையை வெளிப்படுத்தி வந்தாள்.

நீ எங்கிருந்து கொண்டு எதைச் செய்தாலும் அம்மாவுக்குத் தெரியும். அடிகளாருக்கும் தெரியும் என்று குறிப்பிட்டாள் அன்னை. எங்கோ இருந்துகொண்டு நாம் செய்யும் தவறுகள் அம்மாவிற்கு வேண்டுமானால் தெரியலாம், அடிகளாருக்கு அதெல்லாம் எப்படித் தெரியும்? என்று எண்ணுகிற தொண்டர்கள் உண்டு.

நாமக்கல்லைச் சோந்த தொண்டர் ஒருவர். அடிகளாரைச் சேவிக்க அவர்தம் இல்லத்திற்குப் போயிருந்தார். அங்கே வீட்டில் டெலிவிஷன் இருந்ததைப் பார்த்து, நீங்களெல்லாம் டி.வி. பார்க்கலாமா? என்று வினவினார்.

நானும் உங்களைப்போல் குடும்பத்திலே தானே சார் இருக்கிறேன். என் பிள்ளைகள் கேட்பதை அவர்களுக்குத் தேவைப்படுவதை வாங்கிக் கொடுக்க வேண்டிய கடமை இருக்கே சார்? எனக்கு எதற்கு சார் இந்த டி.வி. எல்லாம்? என்றார் அடிகளார்.

அந்தத் தொண்டர் விடவில்லை! நீங்கள் ஆன்மிககுரு! நீங்கள் டி.வி. எல்லாம் பார்க்கக்கூடாது. இதெல்லாம் தேவையற்றது என்று அசட்டுத்தனமாக உபதேசிக்க ஆரம்பித்துவிட்டார்.

அவர் பேச்சை இடைமறித்து அடிகளார், "அது கிடக்கட்டும் சார்! கோவிலுக்கு வர வேண்டும் என்றுதானே ஊரிலிருந்து கிளம்பினீர்கள்? இராத்திரி சேலத்திலே ஏன் சார் தங்கினீர்கள். அந்த லாட்ஜில் ஏன் சார் தங்கினீர்கள்? அப்படித்தான் தங்கினீர்களே.. அந்தப் பெண்ணிடம் தவறாக நடந்துகொண்டுவிட்டு கோயிலுக்கு வரவேண்டுமா சார்?" என்று நாசூக்காக அடிகளார் கேட்டார்.

சேலத்து லாட்ஜில் ஒரு விலைமகளோடு உறவு கொண்ட சமாச்சாரம் இந்த அடிகளாருக்கு எப்படி தெரிய வந்தது! என நினைத்துத் திடுக்கிட்ட அந்தத் தொண்டர் அதிர்ந்து போய், "அம்மா! என்னை மன்னித்து விடு!" என்றபடி நெடுஞ்சாண் கிடையாகத் திருவடிகளில் விழுந்தார்."

அடுத்து, அடிகளார் அங்கிருந்த டி.வி. பெட்டியைக் காட்டி, எனக்கு இந்த டி.வி. மட்டுமே போதும் சார் எனக் கூறி தன் நெற்றிப் பொட்டைச் சுட்டிக் காட்டி, அம்மா இங்கே வேறு டி.வி. பெட்டியைப் போட்டுக் காட்டுதா..? இந்தக் கருமத்தை எல்லாம் பாாத்துத் தொலைக்க வேண்டியிருக்கே சார். என்ன செய்ய..? என்று கேட்டதும் அந்தத் தொண்டர் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கி நின்றார்.

பொதுவாக யார் வந்தாலும், என்ன சார்? என்ன விசேஷம்? என்று சார் போட்டுக் கூப்பிடுவதால் என்ன இவர்? எல்லோரையும்போல சகஜமாகத்தானே பேசுகிறார், நடந்து கொள்கிறார்? என அலட்சியத்துடன் குறைத்து மதிப்பிட்டு விடுகிறார்கள்.

ஒரு தெய்வ அவதாரத்துடன் பேசுகிறோம் என்ற அச்சம் பலருக்கு வருவதில்லை. அடிகளார் அவர்களும் தன்னை ஒளித்துக் கொண்டுதான் மற்றவர்களிடம் பழகுவார்கள்.

அடிகளார் அவர்களின் இந்த எளிமையைப் பார்த்துக் குறைத்து மதிப்பிட்டதால் தான் அந்தத் தொண்டர் வாய்துடுக்காகக் கேட்டுவிட்டார்.

# மருவத்தூரில் அம்மாவின் அவதார நோக்கம்

**அ**ங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருள் அனைவர் கண்ணுக்கும் புலப்படாத நிலையிலிருந்து கொண்டு தன் அருளைப் பாய்ச்சி வருவது ஆன்மிக அன்பர்கள் அறிந்த ஒன்றே.

அப்படிப்பட்ட பரம்பொருள் ஒருசில சமயங்களில் தன்னிலையிலிருந்து இறங்கி வந்து அவதாரம் செய்கின்ற நிலையும் ஏதாவது ஒரு காலத்தில் நிகழ்கிறது.

அந்நிகழ்வே தற்போது நாம் வாழும் காலத்திலேயே அன்னை ஆதிபராசக்தி உலகத்தின் நாபிஸ்தானமான(தொப்புள்) காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காஞ்சிபுரம் மாவட்டத்தில் சித்தர் பூமியாக விளங்கும் மேல்மருவத்தூரில் எளிவந்த நிலையில் மானிடச் சட்டை தாங்கி அடிகளார் என்கின்ற ஸ்தூல சரீரமாகத் தன்னுடைய சூக்குமத்தை அவருள் இருத்தி அவதரித்திருக்கிறாள்.

அவள் அவதாரம் செய்தருளியதன் நோக்கமே பாமர மக்களை ஆன்மிகத்தில் உயர்த்தி ஆட்கொண்டு உய்விப்பதுதான்.

ஆன்மாக்கள் மூன்று வகைப்படுமென்றும் அவை இம்மானிடப் பிறவியிலிருந்து விடுபட்டு முக்திப் பேறு பெறுகின்ற முறையைப் பற்றி சைவசித்தாந்தம் பேசுகிறது. ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலங்களில் இருமலங்கள் நீங்கி ஒரு மலத்தை மட்டும் உடைய விஞ்ஞானகலர் என்கிற நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு இறையருள் ஜோதி நிலையில் உள்நின்று காட்சி தந்து அருளி முக்திப்பேறு அளிப்பான்.

ஒரு மலம் நீங்கி இரு மலங்களையுடைய பிரளயாகலர் என்கிற நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு மான், மழு, கங்கையுடனும் சந்திரஜடாதரனாக உருவத்தைக் காட்டி வெளிநின்று காட்சிதந்து ஆட்கொண்டு அருள்வான்.

நம்மைப் போன்ற ஆன்மிகத்தில் எந்த நிலையும் எய்தாமல் கடை நிலையில் உள்ள மும்மலங்களை உடைய சகலர் என்கிற மூன்றாம் நிலையிலுள்ள ஆன்மாக்களுக்குத் தானே இறங்கி வந்து மானிடச் சட்டை தாங்கி குருவாக வந்து அருளுவான். என சித்தாந்தம் பேசும்.

**R. கொண்டாரெட்டியார் -** சரவம்பாக்கம்

மூன்றாம் நிலையிலுள்ள கடைநிலை ஆன்மாக்களாகிய நாமும் உய்வு பெறவேண்டும் என்ற கருணை நோக்கில் அன்னை ஆதிபராசக்தி அடிகளார் என்கின்ற மானிடச்சட்டை தாங்கிநம்மிடையே தானும் ஒருவர் போன்ற பாவனையில் அவதரித்துக் குருவாக இருந்து நம்மையும் பணிகொண்டு மேல்மருவத்தூரிலிருந்து கொண்டு இப்பூவுலகின் எந்த மூலையிலும் இருப்போரையும் ஆட்கொள்கிறாள்.

இந்த அவதார நோக்கில் பறவை தன் குஞ்சுகளைத் தன் சிறகினுள் அணைத்துக் காப்பதைப் போல கருணை கொண்டு நம்மைத் தன்னுடன் அணைத்துக் காக்கிறாள்.

ஆரம்பகாலத்தில் அருள்வாக்கில் தான் வந்த நோக்கத்தைத் தெளிவாகத் தாய்ப்பாசம் கலந்துயர்ந்த தமிழ் மொழியிலேயே பாமரப் பேச்சு நடையில் நமக்கும் புரியும் வகையில் சொன்னாள். “நான் வேதம் கற்றும், ஓதியும் உணர்ந்தவர்களுக்காக மட்டும் வரவில்லை. ஆசார அனுஷ்டானங்களையும் வேத மந்திரங்களைப் பற்றியும் அறிந்தேயிராத சாதாரண பாமரர்களுக்காகவும் அவர்களையும் கடைத்தேற்றும் நோக்கத்தோடு வந்திருக்கிறேன். கற்றவரையும் ஓதியுணர்ந்தவர்களையும் அவர்களுடைய கல்விச் செருக்கு என்ற ஆணவம் என்னிடம் அவர்களை அண்ட விடாது. அதையும் மீறி வருகிறவர் ஒரு சிலரே. இதற்கும் என் அருளேதான் காரணம் என்று உணர்ந்திருந்தவர்கள் அவர்கள். ஆனால் பாமரன் இதை எதையும் அறிந்திராதவன்” என்றும் ஓர் உதாரணத்தையும் சொன்னாள். (மருவத்தூர் என்கிற ஓர் ஊரைப்பற்றி அறிந்தே இராத காலத்தில்) மருவத்தூருக்குத் தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ள அச்சிறுபாக்கம் என்ற ஊரில் வாரச் சந்தை நடைபெறும். இப்போதும் நடக்கிறது. அந்த வாரச் சந்தைக்குச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சென்று தம் விவசாய விளைபொருட்களை விற்கவும் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிவரவும் மற்றும் ஆடு மாடுகளை விற்கவும் வாங்கவும் சென்று பயனடைவர்.

அப்படிச் செல்லும் ஒருவனை உதாரணமாகச் சொல்லி தன் வரவின் நோக்கத்தைப் புரிய வைத்தாள். அந்த அருள்வாக்கில் “சந்தைக்குத் தன் மாடுகளை ஓட்டிச் செல்லும் விவசாயி தன் தலையில் மாட்டுக்கும் தனக்கும் தேவையான உணவைச் சுமந்துகொண்டும் காலில் செருப்பு அணிந்து கொண்டும் வாயில் வெற்றிலை பாக்கு போட்டு மென்று கொண்டும் தனக்கு அடங்காமல் இழுத்துச் செல்லும் மாடுகளின் கயிற்றைப் பிடித்து இழுத்துக்கொண்டும் அந்த நிலையிலும் என்னை நினைத்து ‘அம்மா’ என்று சொல்லிக்கொண்டு தன் வறுமை நிலையிலும் மடியிலிருந்து பத்து நயாபைசாவை உண்டியலில் போட்டுவிட்டுச் செல்கிறானே அவனைப் போன்ற பாமரனுக்காகவே வந்திருக்கிறேனடா மகனே! நீயும் கடைத்தேற நினைத்தால் உறுதியாகப் பற்றிக் கொள்” எனக் கூறியதோடு “அப்படிப்பட்டவர்கள் கொடுக்கும் ஐந்து பைசா பத்து பைசாவை வைத்தே நான் ஆன்மிகத்தை வளர்ப்பேன்” எனக்கூறினாள்.

(தொடர்சிசி..13ஆம் பக்கம்)

# மருவத்தூரில் அம்மாவின்....

அதே மாதிரியே நடத்திக் காட்டினாள். மருவத்தூரை அனைவரும் அறிந்த நிலை வந்த பிறகு நிறைய செல்வந்தர்கள் வந்து காணிக்கை செலுத்தி ஆன்மிகத்தில் தாங்களும் பங்கு பெறுதல் என்பது இப்போது அன்றாட நிகழ்வு என்பதில் ஐயமில்லை.

கடந்த 2013ஆம் ஆண்டில் தைப்பூச இருமுடி விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி அனைத்து MASM மாவட்டப் பொறுப்பாளர் மற்றும் விழாக்குழுவினர் கலந்து கொண்ட கூட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத் தலைவர் வணக்கத்துக்குரிய திருமதி அம்மா அவர்கள் தலைமையில் நடந்தபோது அம்மா ஆரம்ப நாட்களில் சொன்ன அருள்வாக்கில் ஒன்றைச் சொல்லி நினைவு கூர்ந்தார்கள். “நான் படித்தவர்களுக்காக இங்கு வந்துவிடலை. என்னைப்பற்றி உணராமலேயே ‘அம்மா’என்று வந்துவிழுகின்ற பாமர மக்களுக்காகவே வந்திருக்கிறேன்”என்பதே அந்த அருள்வாக்காகும்.

எனவே அம்மாவைப் பற்றியும் அவள் அருள்வாக்கைப்பற்றியும் நம் சிற்றறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்து காலத்தை வீணே கழிக்காமல் ‘அம்மா’என்று அவளின் அவதாரமாகிய நம் குருபிரானுடைய பாதகமலங்களை நம் மனத்தில் இருத்திச் சரணடைந்து அவளுடைய அவதார நோக்கத்தின் பயனை நாமும் அடைந்து உய்வோமாக! அம்மா நம்முடைய அறிவுக்குள் அடங்காப் பேரருள். அம்மா குருவாக வந்து நம்மையும் பொருட்டாக எண்ணி வழங்கியுள்ள தொண்டு, அன்னதானம், வேள்வி மற்றும் அவ்வப்போதைகான கிரகநிலைகளுக்கு ஏற்றார்போல அவள் காட்டும் வழிபாட்டு முறைகளைத் தவறாது பின்பற்றி நடந்து அவளின் அவதார காலக் கருணை மழையில் நனைந்து அவதார நோக்கத்தின் பலனை முழுமையாக அடைவோமாக. இதற்கு ஓர் உதாரணமாக நடந்த நிகழ்வை இங்கே முன் வைக்கிறேன்.

(ஒவ்வொரு சக்தியும் சக்தி மாலை அணிந்து, சக்தி விரதம் இருந்து ஒன்பது முறை அன்னைக்கு சித்தர்பீடக் கருவறையில் இருமுடி அபிடேகம் செய்யும்பொழுது சிவப்பு நிற ஆடைகள் அணிந்து, சிவப்பு நிற இருமுடிப்பை உபயோகிக்க வேண்டும். அவர் 10ஆவது முறையாக சக்திமாலை அணியும் பொழுது அவர் உடுத்துவது (சிவப்பு கலந்த) மஞ்சள் நிற ஆடையாகவும், இருமுடிப்பையும் (சிவப்பு கலந்த) மஞ்சள் நிறத்திலும் இருக்க வேண்டும் என்பதும் அன்னை அருள்வாக்கில் அளித்த உத்தரவு. - இனி கட்டுரைக்குள் செல்வோம்.)

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி இரவு 11.15 மணி இருமுடி செலுத்த எங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் மன்றத்தைச் சேர்ந்த 42 சக்திகள் மேல்மருவத்தூர் சித்தர் பீடம் வந்தனர். அவர்களை இருமுடி செலுத்த பொறுப்பாளர் அனுமதிக்கவில்லை.

அந்த நேரம் நான் இருமுடி உணவுக் கூடத்திலிருந்து சித்தர் பீடம் வந்தேன். இன்னும் எவ்வளவுபேர் உணவருந்த வேண்டிக் காத்திருக்கிறார்கள் எனத் தெரிந்து கொள்ளவே வந்தேன். அப்போதுதான் மேற்படி அனுமதி மறுப்பு நடந்திருக்கிறது.

அந்த மன்றத் தலைவர் என்னைப் பார்த்ததும் பதற்றத்துடன் எதிரே ஓடி வந்தார். என்ன விஷயம் என்று கேட்டேன். “நாங்கள் 42 பேர் வந்தோம் சக்தி. எங்கள் ஊரிலிருந்து முதன்முறையாக இவ்வளவு பேரைக்கூட்டி வந்தேன். இங்கே வந்து இருமுடி செலுத்தத்தடை செய்கிறார்கள்”என்றார்.

நான் என்னுடன் வாருங்கள் என்று உடன் அழைத்து வந்தேன். “இன்னும் அரை மணி நேரத்தில் 2005 புது வருடம் பிறக்க இருக்கிறது. ஏன் இவ்வளவு காலதாமதமாக வருகிறீர்கள்?”என்று அவர்களைக் கடிந்து கொண்டே வந்து இருமுடிக் கூடத்தை அடைந்தேன்.

நல்ல காலமாக கருவறையில் இன்னமும் இருமுடி அபிடேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. “சக்தி! நீங்கள் ஒரு குருஜியாக இருக்கிறீர்கள். ஜனவரி 1ஆம் திகதி இருமுடி செலுத்த அனுமதிக்கப்படமாட்டாது எனத் தெரியாதா?”எனக் கேட்டேன்.

அதற்கு அவர் “எனக்கு என்ன தெரியும்? போன வருடம்தான் முதன் முதலில் வந்தேன். இது இரண்டாவது மாலை. ஆகவே எனக்குத் தெரியாது. மன்னித்துவிடுங்கள்”என்றார்.

எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது. “இது இரண்டாவது மாலையா..? அப்படி என்றால் ஏன் மஞ்சள் ஆடை அணிந்தீர்கள்?”என்றேன். “குருஜி மஞ்சள் ஆடை அணிய வேண்டுமாமே! சொன்னார்கள”என்றார். அங்கு பார்த்தால் வந்திருந்த 42 போல் மிகப் பெரும்பான்மையோர் மஞ்சள் ஆடையிலிருந்தனர்.

எனக்குக் குழப்பமாகி விட்டது. நான் அவர்களிடம் “என்ன சக்தி! இவ்வளவு பேர் மஞ்சளாடையிலிருக்கிறீர்களே! அவர்களில் அதிக மாலைகள் போட்டு வந்தவர் ஒருவரைக் குருஜியாகக் கொண்டு இருமுடி மாலை அணிய வேண்டியதுதானே?”என்றேன்.

(தொடர்ச்சி..14ஆம் பக்கம்)

## மருவத்தூரில் அம்மாவின்....

அதற்கு அவர் “சக்தி இவர்கள் எல்லாம் இப்போதுதான் முதல்முறையாக மாலை போட்டு வந்துள்ளனர்” என்றார். எனக்குத் தலை சுற்றுவது போலாகிவிட்டது. மயக்கம் வந்து விழாதகுறைதான். “என்ன? முதல் மாலையா? பின் ஏன் மஞ்சள் ஆடையும் மஞ்சள் நிற இருமுடியுமாக வந்தீர்கள்?”எனக்கேட்டேன்.

“நான் இங்கு இருமுடிப்பை மாலை வாங்க வந்தபோது ஆலய இருமுடிப்பை விற்கும் கடையில் சொன்னார்களே!”

“என்ன சொன்னார்கள்?”

“முதல் ஒன்பது மாலை சிவப்பு ஆடை, சிவப்பு இருமுடிப்பை என்றும் 10ஆவது மாலையிலிருந்து மஞ்சள் ஆடை மஞ்சள் இருமுடிப்பை எனவும் சொன்னார்களே! அதன்படியே முதல் ஒன்பது பேருக்குச் சிவப்பும், 10ஆவது நபரிலிருந்து மீதி அனைவருக்கும் மஞ்சள் ஆடையும் இருமுடிப்பையும் வாங்கிச் சென்றேன். நான் கேட்காமல் ஏதும் செய்ய மாட்டேன் சக்தி!”என்று சொல்லிவிட்டு, “தவறு செய்யக்கூடாது சக்தி! அது தெய்வக் குற்றமாகிவிடும்”என்று தான் ஏதோ சரியாகச் செய்ததாகப் பெருமிதம் வேறு பட்டுக்கொண்டார்.

இந்த நேரம் பார்த்து வணக்கத்திற்குரிய திருமதி அம்மா அவர்கள் அங்கு வந்து விட்டார்கள். நான் என்ன செய்வது எனத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன். “என்ன நடக்கிறது இங்கே? இவர்களையெல்லாம் எதனால் இருமுடிசெலுத்தாமல் இங்கே இருக்கிறார்கள்? நேரமாகிவிட்டதே. கருவறை நடை சாத்தப்போகிறார்களே!”எனத் திருமதி அம்மா அவர்கள் வினவினார்கள்.

நடைபெற்ற விசித்திரத்தை நாங்கள் கூறவும் திருமதி அம்மா அவர்கள் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்துவிட்டு, “சரி! இவர்கள் நம் சித்தர்பீடத்தில்தான் இருமுடிப்பை, மாலை வாங்கியிருக்கிறார்கள். அறியாமையினாலும், ஆர்வமிகுதியாலும் இவ்வாறு செய்துவிட்டார்கள். இவர்களுடைய பக்தியில் குறையில்லை”என்று சொல்லி உடனடியாக அவர்களை இருமுடி அபிடேகத்திற்கு அனுப்புமாறு கூறி உத்தரவிட்டார்கள்.

அவர்களும் மனநிறைவோடு இருமுடி செலுத்தினர்.

இதைப்போலவே பெரிய புராணத்தில் வருகின்ற வேடர் குலத்தைச் சேர்ந்த திண்ணன் என்கிற கண்ணப்ப நாயனார் தன்னுடைய ஆழ்ந்த பக்தியினால் ஆறு நாட்களிலேயே இறை அருளைப் பெற்ற வரலாற்றையும் பொருத்திப் பார்த்துத் தெளிவு பெறுவது நலம்!

ஓம் சக்தி!

## இன்றைய ஆன்மிகம்:

**“பணம் பழுதாகிவிட்டது. பக்தியும் குறைந்துவிட்டது. சதித்திட்டம் வளர்ந்துவிட்டது. சக்தியும் குறைந்துவிட்டது. பக்தியும் (Powder) தூள் ஆகிவிட்டது.**

**காற்று ஒன்றுதான். அது வீசும் இடத்திலிருந்து அதற்கேற்ப வானிலை அமைகிறது. அதுபோலவே உன் மனநிலைக்குத் தக்கபடிதான் உன் பக்தியும் அமையும்.”**

## கடந்த காலத் தவறுகள்:

**“கடந்த காலத் தவறுகளைத் தூக்கி எறிந்துவிட்டு இனி நல்லதைச் செய்ய வேண்டும் என்று நினைக்க வேண்டும்.**

**தலைமுறை தலைமுறையாக ஆன்மிகம் வளர வேண்டும். வாழையடி வாழையாக என் குலம் தழைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ள வேண்டும்.”**

**- அன்னையின் அருள்வாக்கு**

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம் |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

# புற்று நோயிலிருந்து காப்பாற்றிய அன்னை

அம்மாவின் தயவில் வாழும் குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. எனது குடும்பத்தில் அம்மா நடத்திய அற்புதம். எனது மூத்த சகோதரன் ஜெர்மனியில் குடும்பத்துடன் வசித்து வந்தார். திடீரென அவருக்கு வயிற்றில் ஒரு வலி ஏற்பட்டு சாப்பிட முடியாமல் வாந்தி எடுத்தார். அவர் ஆஸ்பத்திரிக்கு போனபோது அவரை பரிசோதனை செய்தனர். அப்போது அவருக்கு இரப்பையில் புற்றுநோய் என்று சொன்னார்கள். எனது சகோதரனுக்கு மூன்று குழந்தைகள் ஆறு வயதிற்குள் இருந்தனர்.

அவருக்கு யாரும் அருகில் உதவிக்கு இல்லை. இந்த நிலையில் எனது சிறிய தாயார் இந்தியாவில் இருந்தார். அவரின் உதவியுடன் மருவத்தூர் அம்மாவிடம் பாதபூசை செய்து கேட்டபோது அம்மா மௌனத்தில் தனது கையை நெஞ்சில் சைகை மூலம் தான் காப்பாற்றி தருவதாக அருளினார்.

**சக்தி டீ. சுஜானி**
கொழும்பு - இலங்கை

அப்போது எனது சிறிய தாயார் (ரோகிணி தேவி) தனது மனதுக்குள் தான் இந்தியாவில் இருக்கும் வரை தனது மகனுக்காக ( எனது சகோதரனுக்காக) இருமுடி செலுத்துவதாக வேண்டிக்கொண்டார். அம்மா அந்த வேண்டுதலை ஏற்று அவரை காப்பாற்றி தந்துள்ளார். இன்று வரை எனது சிறிய தாயார் 22 இருமுடி மாலை செலுத்தியுள்ளார்.

எனது தம்பி கனடாவில் நலமாக உள்ளார். அம்மாவின் கருணையால் அந்த நோய் குணமடைந்து குடும்பத்துடன் சந்தோசமா உள்ளார். யாருக்காக யார் அழுது வரம் கேட்டாலும் ஆதிசக்தி இறங்கி வருவாள் என்றதற்கு இந்த சம்பவமே சாட்சி.

ஓம் சக்தி

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 01.05.2017 | திங்கள் | சித்திரை | 18 | ஷஷ்டி விரதம் |
| 02.05.2017 | செவ்வாய் | சித்திரை | 19 | **வருஷாபிஷேகம் - அலங்கார உற்சவ ஆரம்பம்**<br>பாலமுருகன் ஆலயம் - பேர்த் - மேற்கு மாநிலம் |
| 06.05.2017 | சனி | சித்திரை | 23 | **ஏகாதசி விரதம்** |
| 08.05.2017 | திங்கள் | சித்திரை | 25 | பிரதோஷ விரதம் |
| 09.05.2017 | செவ்வாய் | சித்திரை | 26 | சித்திரகுப்த விரதம் |
| 10.05.2017 | புதன் | சித்திரை | 27 | **சித்திரா பூரணை விரதம் -**<br>**சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 11.05.2017 | வியாழன் | சித்திரை | 28 | **தேர்த் திருவிழா - அலங்கார உற்சவ நிறைவு**<br>பாலமுருகன் ஆலயம் - பேர்த் - மேற்கு மாநிலம் |
| 14.05.2017 | ஞாயிறு | சித்திரை | 31 | சங்கட சதுர்த்தி<br>**திருவிளக்குப் பூஜை**<br>**ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா** (AMMA) |
| 22.05.2017 | திங்கள் | வைகாசி | 08 | **ஏகாதசி விரதம்** |
| 23.05.2017 | செவ்வாய் | வைகாசி | 09 | **பிரதோஷ விரதம்** |
| 25.05.2017 | வியாழன் | வைகாசி | 11 | **அமாவாசை விரதம் - கார்த்திகை விரதம்** |
| 29.05.2017 | திங்கள் | வைகாசி | 15 | சதுர்த்தி விரதம் |
| 31.05.2017 | புதன் | வைகாசி | 17 | ஷஷ்டி விரதம் |
| 03.06.2017 | சனி | வைகாசி | 20 | வைகாசி விசாகம் - முருகன் ஏகதின இலட்சார்ச்சனை<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் - மெல்போர்ண் |
| 05.06.2017 | திங்கள் | வைகாசி | 22 | **ஏகாதசி விரதம்** |
| 07.06.2017 | புதன் | வைகாசி | 24 | **வைகாசி விசாகம் - பிரதோஷ விரதம்** |
| 09.06.2017 | வெள்ளி | வைகாசி | 26 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 11.06.2017 | ஞாயிறு | வைகாசி | 28 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 13.06.2017 | செவ்வாய் | வைகாசி | 30 | சங்கட சதுர்த்தி |
| 20.06.2017 | செவ்வாய் | ஆனி | 06 | ஏகாதசி விரதம் |
| 21.06.2017 | புதன் | ஆனி | 07 | கார்த்திகை விரதம் |
| 22.06.2017 | வியாழன் | ஆனி | 08 | பிரதோஷ விரதம் |
| 24.06.2017 | சனி | ஆனி | 10 | **அமாவாசை விரதம்**<br>**கொடியேற்றம் - நயினை நாகபூசணி அம்மன்** |
| 18.07.2017 | செவ்வாய் | ஆடி | 02 | ஆடிச் செவ்வாய் 1ஆவது வாரம் |

**மக்களே காரணம்:**

**“இன்றைய அரசியல் அச்சு இல்லாத வண்டி போல ஓடிக்கொண்டிருக்கிறது. மக்கள் உள்ளத்தில் அழுக்கு ஏற்பட்டால் அரசியலிலும் நாற்றம் அடிக்கத்தான் செய்யும்.”**

- **அன்னையின் அருள்வாக்கு**